# ஜெயா குழும பொறியியல் கல்லூரி பட்டமளிப்பு விழா




▶ திருநின்றவூர் ஜெயா குழும பொறியியல் கல்லூரிகளின் பட்டமளிப்பு விழாவில் டிஆர்டிஓ இணை இயக்குநரும், விஞ்ஞானியுமான என்.எஸ்.குமார் 1100 மாணவ, மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கினார். அருகில், கல்விக் குழுமங்களின் தலைவர் அ.கனகராஜ், முருகப்பா குழும நிர்வாக துணைத் தலைவர் கிருஷ்ணா ஸ்ரீனிவாஸ், குழும இயக்குநர் கே.எல்.சண்முகநாதன், ஆராய்ச்சி துறை தலைவர் எம்.சோமசுந்தரம்,, முதல்வர்கள் ஜி.சங்கரநாராயணன், பி.மாரிமுத்து, பி.கோபிநாதன், அகஸ்டியன், ஜி.கலாராணி.

## 1100 மாணவர்களுக்கு பட்டம்

சென்னை, பிப்.26: திருநின்றவூரில் உள்ள ஜெயா குழும பொறியியல் கல்லூரி பட்டமளிப்பு விழா நடந்தது. இதில், 1100 மாணவர்களுக்கு பட்டம் வழங்கப்பட்டது.

சென்னை அடுத்த திருநின்றவூரில் உள்ள ஜெயா பொறியியல் கல்லூரி வளாகத்தில் ஜெயா குழும பொறியியல் கல்லூரிகளின் பட்டமளிப்பு விழா நேற்று நடந்தது.

ஜெயா கல்விக் குழுமங்களின் தலைவர் அ.கனகராஜ் தலைமை தாங்கினார். ஜெயா பொறியியல் கல்லூரியின் முதல்வர் ஜி.சங்கரநாராயணன் வரவேற்றார். குழும இயக்குநர் கே.எல். சண்முகநாதன், ஆராய்ச்சி துறை தலைவர் எம்.சோமசுந்தரம், ஜெயா பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி முதல்வர் பி.மாரிமுத்து, ஜெயா சக்தி பொறியியல் கல்லூரி முதல்வர் பி.கோபிநாதன், ஜெயா தொழில்நுட்பக் கல்லூரி முதல்வர் அகஸ்டியன், ஒருங்கிணைப்பாளர் ஜி.கலாராணி முன்னிலை வகித்தனர்.

விழாவில், டிஆர்டிஓ இணை இயக்குநரும், விஞ்ஞானியுமான என்.எஸ். குமார், முருகப்பா குழும நிர்வாக துணைத் தலைவர் கிருஷ்ணா ஸ்ரீனிவாஸ் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். இதில், 1,100 மாணவ, மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கினர். இதில் பல்வேறு துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் கலந்து கொண்டனர்.

முயன்ற